செ.வெ.எண்: 59 / ஜீன் / 2021 நாள்: 16.06.2021

செய்திக் குறிப்பு

----------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான கோவிட்-19 தடுப்பூசி செலுத்தும் சிறப்பு மருத்துவ முகாம் 17.06.2021 அன்று காலை 9.00 மணி முதல் திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள கலையரங்கம் திருமண மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளது. இம்முகாமில் 18 வயதும் அதற்கு மேற்பட்ட அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் கோவிட்-19 தடுப்பூசி செலுத்தப்படும். கோவிட்-19 தடுப்பூசி செலுத்திட விரும்பும் மாற்றுத்திறனாளிகள் தங்களது மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டையுடன் முககவசம் அணிந்து வரவேண்டும். இந்த அரிய வாயப்பினை அனைத்து மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்திக் கொள்ளுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**